பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

# தேயிலை ஆராய்ச்சி சபை

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்

# வெற்றிடம்

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

1. தலைவருக்கான பிரத்தியேக உதவியாளர் (ஒப்பந்தம்)

**Personal Assistant to Chairman**

பணி விளக்கம் :

தலைவருக்கான செயலாளருக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாகவிருத்தல்.

வெளிவாரி:

அ. கபொத (உ/த) பரீட்சையில் மூன்று சித்திகள் மற்றும் கபொத(சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களுடன் சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக நான்கு பாடங்களில் (4) திறமைச் சித்திகள்.

மற்றும்

ஆ. செயலாளருக்கான செயற்பாடு தொடர்பாக தேசிய சான்றிதழ் கற்கைநெறியில் ஒரு வருட டிப்ளோமா அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து (ஒரு வருடத்திற்குக் குறையாத) செயலாளருக்குரிய சான்றிதழ் கற்கை நெறியில் டிப்ளோமா.

மற்றும்

இ. கூட்டுத்தாபனமொன்றில்/சபை அல்லது புகழ் வாய்ந்த வணிக நிறுவனமொன்றில் செயலாளர் வேலையில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட அனுபவம். இதில் ஒரு வருட காலம் (ஆ) இலுள்ள தகைமையை பெற்றவராகவிருத்தல் வேண்டும்.

மற்றும்

ஈ. கணனியில் ஆகக் குறைந்த சொல்வழிப்படுத்தல் வேகம் ஆங்கிலத்தில் மற்றும் சிங்களத்தில் ஒரு நிமிடத்திற்கு 65 சொற்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் கணனி சமர்ப்பிப்புகளின் (Computer presentations) திறன்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

உ. ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் சுருக்கெழுத்து வேகம் முறையே ஒரு நிமிடத்திற்கு 80 மற்றும் 70 சொற்களாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

ஊ. ஆங்கிலம்/சிங்கள மொழிகளில் சிறந்த தொடர்பாடல் திறன்கள் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:

தமிழில் வேலை செய்யும் பழக்கம்/அறிமுகம் (Introduction/Acquaintance) என்பன மேலதிகத் தகைமையாகும்.

சம்பளம் : JM 1-2 (2025) ரூபா 66,781.00 (01/2025ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2026-01-01ஆம் திகதியில் சம்பளம்)

வயது : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

தெரிவு முறை : எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

பதவிகள் ஒரு வருட காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையிலானவை. சகல சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் தொடர்பு விபரங்கள் சகிதம் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவங்களை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2026 ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன் ''பணிப்பாளர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், சென் கூம்ஸ், தலவாக்கலை'' எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அந்த நிறுவனத் தலைவருடாகவே அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் அவர் தெரிவு செய்யப்பட்டால் நியமனத்தைப் பெற்றுக்கொள்ள விடுவிக்கப்படுவார் என சான்றுபடுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்கூறிய தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணைய தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**

Gazette.lk